# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாள், வியாழன்கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் துரிதமான சேவையை வழங்கும் பொருட்டு மின் ஆளுமை முறையில், பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல், சொத்துவரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை, சேவைக்கட்டணம், இதர வரியில்லாத இனங்கள் ஆகியவைகளில் செயல்பட்டு வரும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் இணைய இணைப்பிற்கான மின் ஆளுமை உபகரணங்களான ஃபயர்வால், ரௌட்டர் மற்றும் வலையமைப்பு சுவிட்சுகள் ஆகியவைகளை ஆண்டு பராமரிப்பு முறையில் பராமரிக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி 28.04.2017ல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மெசர்ஸ்.ஆலன் இன்போ சர்வீஸஸ், திருச்சி நிறுவனத்திற்கு 11.08.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 31.03.2018ல் பராமரிப்பு காலம் முடிவடைந்து விட்ட நிலையில், இப்பணியின் அவசரம் அவசியம் கருதி, மெசர்ஸ்.ஆலன் இன்போ சர்வீஸஸ் திருச்சி நிறுவனம் 23.03.2018ம் தேதிய தனது கடிதத்தில், மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு சென்ற ஆண்டு வழங்கிய அதே விலை விகிதத்தில் செய்ய சம்மதம் கடிதம் வழங்கியுள்ளதின் பேரில், மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2019 வரை கால நீட்டிப்பு செய்து, ஆணையர் அவர்களின் அனுமதி எண்.680 நாள்.23.11.2018ல் ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில், பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 26.11.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மெசர்ஸ்.ஆலன் இன்போ சர்வீஸஸ் திருச்சி நிறுவனம் 23.03.2019ம் தேதிய தனது கடிதத்தில், மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு சென்ற ஆண்டு வழங்கிய அதே விலை விகிதத்தில் செய்ய சம்மதம் கடிதம் வழங்கியுள்ளதின் பேரில், மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை காலநீட்டிப்பு செய்து ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி, அதே விலை விகிதத்தில் மதிப்பீடு ரூ.9.75 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணியினை மேற்கொண்டதற்கு, நிர்வாக அனுமதி கோரி ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட பணியினை மெசர்ஸ்.ஆலன் இண்போ சர்வீஸஸ் திருச்சி நிறுவனம் 01.04.2019 முதல் 31.03.2020 வரை ஓராண்டிற்கு அதே விலைவிகிதத்தில் பணி உத்திரவு வழங்க அனுமதி அளிக்கலாம்.
2. 2019–2020ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், கணினி இயக்குவதற்கான செலவினம் என்ற தலைப்பின் (எண் 2026) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளத் தொகை ரூ.65.00 இலட்சத்திலிருந்து ஒதுக்கீடுச் செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**இ7/3452/2017(மையம்)**

**தீர்மானம் எண்.666 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண்.14 டாக்டர் மதுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் கழிவறை கட்டிடம் மற்றும் Head Room கட்டிடத்தின் மேற்கூரை பழுதடைந்துள்ளதால், மேற்படி பள்ளியில் பயின்று வரும் மாணவ மாணவிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

எனவே பள்ளி மாணவ மாணவியர்களின் நலன்கருதி மேற்படி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.21.40 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.21.40 லட்சத்திற்கு கல்விநிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதி – பள்ளிக் கட்டிடங்கள் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் என்ற தலைப்பின் (தலைப்பு எண்.3102) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளத் தொகை ரூ.500.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்:இ1/10341/2019(மையம்)**

**தீர்மானம் எண்.667 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.49, 50, 55 & 56க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.301/2019–2020ன் வாயிலாக 05.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் 55க்குட்பட்ட தேவர் காலனி மெயின் ரோட்டில் உள்ள தார்தளத்தை மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் மேம்படுத்தும் பணி<br>**இ2/4917/19(மை)**<br><br>**மதிப்பீட்டு தொகை ரூ.15.30 இலட்சம்** | 1. **திரு.ஆர்.தேவராசன்,** 7.80 % குறைவு<br><br>2. திரு.ஆர்.ஜெயராஜ், 0.78 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.தேவராசன்,** ஒப்பந்தக்காரர், மதிப்பீட்டைக் காட்டிலும் **7.80** குறைவான விலை விகிதத்தில் செய்து தருவதாக கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக செய்ய வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் வைப்புத் தொகை மதிப்பீட்டு தொகையிலிருந்து 2% ரூ.30,600/–ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால்) தொகையை வங்கி வரைவோலையாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 2 | வார்டு எண் 50க்குட்பட்ட தென்னூர் ராமசந்திரபுரம் சாலையினை மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் மேம்படுத்தும் பணி **இ2/4500/19(மை)** **மதிப்பீட்டு தொகை ரூ.11.00 இலட்சம்** | 1. **திரு.ஆர்.தேவராசன்,** 0.29 % குறைவு<br>2. திரு.ஆர்.ஜெயராஜ், 0.43 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.தேவராசன், ஒப்பந்ததாரர் அவர்கள்** மதிப்பீட்டைக் காட்டிலும் **0.29 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | வார்டு எண் 50க்குட்பட்ட வாமடம் பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருகளில் உள்ள சாலையினை மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் மேம்படுத்தும் பணி **இ2/4501/19(மை)** **மதிப்பீட்டு தொகை ரூ.19.80 இலட்சம்** | 1. **திரு.ஆர்.தேவராசன்,** 0.18 % குறைவு<br>2. திரு.ஆர்.ஜெயராஜ், 1.34 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.தேவராசன், ஒப்பந்ததாரர் அவர்கள்** மதிப்பீட்டைக் காட்டிலும் **0.18 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு எண் 49, 50, 55& 56க்குட்பட்ட மாநகராட்சிக்கு கட்டிடங்கள், ஆழ்க்குழாய் கிணறு, மினி பவர் பம்ப் மற்றும் பொது குழாய் போன்ற இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கும் பணி **இ2/10251/19(மை)** **மதிப்பீட்டு தொகை ரூ.15.00 இலட்சம்** | 1. **திரு.எம்.பாபுராஜ்,** 0.06 % குறைவு<br>2. திரு.பி.வேலுசாமி, 0.74 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.எம்.பாபுராஜ், ஒப்பந்ததாரர் அவர்கள்** மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 5 | வார்டு எண் 55க்குட்பட்ட காந்திபுரம் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மைய எண் 401 மற்றும் 402க்கான (ICDS) கட்டிடம் கட்டும் பணி **இ2/4502/19(மை)** **மதிப்பீட்டு தொகை ரூ.24.00 இலட்சம்** | 1. **திரு.ஆர்.ஜேக்கப்,** 0.70 % குறைவு<br>2. திரு.பி.ஞானசேகர், 44.22 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.ஜேக்கப், ஒப்பந்ததாரர் அவர்கள்** மதிப்பீட்டைக் காட்டிலும் **0.70 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் கண்டு உள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/4917/2019(மையம்)**

**தீர்மானம் எண்.668 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.50க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.302/2019–2020ன் வாயிலாக 05.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட

ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.50க்குட்பட்ட அண்ணாநகர் சர்தார் படேல் தெருவில் பழுதடைந்துள்ள தார்சாலையை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் சீரமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.35.00 இலட்சம்** | 1. **திரு.எஸ்.கணேசன்,** 0.07 % குறைவு<br><br>2. மெர்சஸ். வேலன் பில்டர்ஸ் (பி) லிமிடெட், 1.04 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.எஸ்.கணேசன்,** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.07 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் கண்டு உள்ள பணிக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/4916/2019(மையம்)**

**தீர்மானம் எண்.669 (பொருள்—4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.52க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.289/2019—2020ன் வாயிலாக 05.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்: 52க்குட்பட்ட, அம்மையப்பநகர் குறுக்கு தெருக்களில் உள்ள தார் சாலைகளை மைய சுடு கலவை இயந்திரம் மூலம் மேம்படுத்தும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.58.40 இலட்சம்** | 1. **திரு.ஆர்.ஜெயராஜ்,** 0.15 % குறைவு<br><br>2. மெர்சஸ்.என்.எஸ் &கோ, 3.70 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.ஜெயராஜ்,** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.15 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் கண்டு உள்ள பணிக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/4714/2019(மையம்)**

**தீர்மானம் எண்.670 (பொருள்—5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.53க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.288/2019–2020ன் வாயிலாக 05.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்துபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்: 53க்குட்பட்ட, உய்யகொண்டான் திருமலை, செல்வநகர் குறுக்கு தெருக்களில் உள்ள தார்ச்சாலையை மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் மேம்படுத்தும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.42.60 இலட்சம் இ2/4719/19(மை)** | 1. **மெர்சஸ்.வேலன் பில்டர்ஸ் (பி) லிமிடெட்,** 0.11 % குறைவு<br><br>2. திரு.எஸ்.கணேசன், 1.26 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **மெர்சஸ்.வேலன் பில்டர்ஸ் (பி) லிமிடெட்,** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.11 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்: 53க்குட்பட்ட, உய்யகொண்டான் திருமலை, ரெங்கா நகர் மெயின் ரோடு (9வது கிராஸ் முதல் 13வது கிராஸ் சந்திப்பு வரை) மற்றும் (9 முதல் 13வது குறுக்கு தெருக்கள் வரை) அனைத்து சாலைகளை மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் புதுப்பிக்கும் பணி<br>**மதிப்பீடு ரூ.25.50 இலட்சம் இ2/1828/19(மை)** | 1. **மெர்சஸ்.என்.எஸ் & கோ,** மதிப்பீட்டு விலை<br><br>2. திரு.சி.கே ராஜன், 0.68 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **மெர்சஸ்.என்.எஸ் & கோ,** நிறுவனம் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் கண்டு உள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/4719/2019(மையம்)**

**தீர்மானம் எண்.671 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.14க்குட்பட்ட இ.பி கானி சாலையில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகதார நிலையம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையத்தில் பெரும்பாலான பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது இந்நிலையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பதினால், பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட (UPHC) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை (UCHC)ஆக மேம்படுத்தி, மேற்கண்ட நிலையத்தில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ரூ.20.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.20.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019– 2020 ஆண்டின் தேசிய நகர்புற சுகாதார திட்ட நிதியின் கீழ்** இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ளலாம்.

**இ2/2219/2019(மையம்)**

**தீர்மானம் எண்.672 (பொருள்–7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.14க்குட்பட்ட கீழரன் சாலையில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகதார நிலையம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையத்தில் பெரும்பாலான பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது இந்நிலையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பதினால், பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட (UPHC) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை (UCHC)ஆக மேம்படுத்தி, மேற்கண்ட நிலையத்தில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ரூ.99.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.99.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019–2020 ஆண்டின் தேசிய நகர்புற சுகாதார திட்ட நிதியின் கீழ்** இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ளலாம்.

**இ2/2220/2019(மையம்)**

**தீர்மானம் எண்.673 (பொருள்–8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.14க்குட்பட்ட இ.பி ரோடு பிரதான சாலையில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகதார நிலையம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையத்தில் பெரும்பாலான பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது இந்நிலையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பதினால், பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட (UPHC) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை (UCHC)ஆக மேம்படுத்தி, NUHM 16-17 கீழ் விடுபட்ட அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ரூ.28.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ. 28.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019– 2020 ஆண்டின் தேசிய நகர்புற சுகாதார திட்ட நிதியின் கீழ்** இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ளலாம்.

**இ2/12006/2019(மையம்)**

**தீர்மானம் எண்.674 (பொருள்–9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் அமைந்துள்ள டர்பைன் நீர்பணி நிலையம், கம்பரசம்பேட்டை மற்றும் கலெக்டர் வெல் நீர்பணி நிலையம் அய்யாளம்மன் படித்துறையில் முறையே – 150 மற்றும் 400 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் பம்பு செட்டுகள், அதற்கான மின்னியல் இயக்க கருவிகள் பேனல் போர்டுகள் மற்றும் 25 குதிரை திறன் கொண்ட நீர் மூழ்கி மின் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய டர்பைன் நீர்பணி நிலையம் மூலம் இரண்டு உயர் நிலை நீர்தேக்கத்தொட்டிகளுக்கு குடிநீர் அனுப்பப்பட்டு, அப்பகுதி வாழ் பொது மக்களுக்கு குடிநீர் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. கலெக்டர் வெல் அய்யாளம்மன் படித்துறை நீர் பணி நிலையம்

கோடைகாலங்களில் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது புதிதாக இணைக்கப்பட்ட வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் அளித்திட பரிசார்ந்த முறையில் இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கூறிய நீர்பணி நிலையங்களை இயக்குவதற்கு போதிய, தகுதி வாய்ந்த தொழில்நுட்ப பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாத காரணத்தால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலைவிபர பட்டியலில் உள்ள தொழிநுட்ப பணியாளர்களுக்கான விலையின் அடிப்படையில், ஓராண்டிற்கு இயக்கி பராமரிக்க மதிப்பீடு ரூ.39.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.39.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை **2019-20ம்** ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையப் பணிகள் /மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி/பகிர்மான குழாய்கள் சீரமைத்தல் மற்றும் இதரப்பணிகள்(4103201) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.600.00 லட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

**இ4/11546/2019/(மையம்)**

**தீர்மானம் எண்.675 (பொருள்–10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்டம், வார்டு எண்.38, 39 மற்றும் 42க்குட்பட்ட பகுதிகளில் திறந்த வெளியில் கிணறுகள் மூடப்படாமல் பாழடைந்த நிலையிலும், குப்பைகளுகும் செடிகொடிகளும், மண்துகள்களும் நிறைந்து காணப்படுவதால், அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கில், பொதுமக்களின் நலன் கருதி மேற்படி கிணறுகளை சுற்றிலும் இரும்பிலான மூடி அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.24.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.24.50 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு திருத்திய வரவு செலவுத்திட்டத்தில் **சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் / பழைய சிமெண்ட் கான்கிரீட் தளத்தை மேம்படுத்துதல் மற்றும் இதரப்பணிகள் (3113)** என்ற தலைப்பின் கீழ் இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண் : இ1/11830/2019(மையம்)**

**தீர்மானம் எண்.676 (பொருள்–11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ-அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்:30க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியை திருபி.ஞானசேகர், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | **தொகுப்பு** | **ப. எண்** | **வ . எண்** |
| 1 | வார்டு எண்.30, அர்ஜீனன் நகரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி **(இ2/3791/2015 (மையம்) மதிப்பீடு ரூ.53.00 இலட்சம்** | திருபி.ஞான சேகர் திருச்சி. | 15.03.16 | 39737 (4%) | VIII | 110 | 46 2 |
| | | | 29.06.16 | 49829 (4%) | Arr V | 74 | 4 |
| | | | 28.10.16 | 109194 (4%) | Arr V | 74 | 11 |
| | | | 05.05.17 | 8314 (4%) | Arr V | 77 | 2 |
| **மொத்தம்** | | | | **207,074** | | | |

ஒப்பந்ததாரர் திருபி.ஞானசேகர், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.2,07,074/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.2,07,074/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/11278/2019(மையம்)**
**தீர்மானம் எண்.677 (பொருள்—12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**
**பொருள். 13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்தில் நடைபெற்ற கீழ்கண்டுள்ள வார்டு குழு பணிகளில் வேலை செய்து முடித்து இறுதிப்பட்டியல் தொகை ஒப்பந்ததாரர் திருமதி. P.செல்வராணி என்பவருக்கு வழங்கப்பட்டுவிட்டது. மேற்படி பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர் திருமதி. P. செல்வராணி என்பவர் கோரியுள்ளார்.

கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை. மேலும், ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | கோப்பு எண் | ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விபரம் | காப்புத் தொகை பிடித்தம் செலுத்தப்பட்ட நாள் / வைப்புத் தொகை செலுத்தப்பட்ட நாள் & இரசீது எண் | பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகை/வைப்புத் தொகை ரூ. | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகுப்பு | பக்கம் எண் | வ. எண் | தலைப்பு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | | | |
| 1. | இ1/5486/2013 | மறு ஒ.அ.எண்.07/13—14, வரிசை எண்.9 | Dt:03.4.2014 | 1,485/- | Vol-I | 10 | 138 | WS |
| 2. | இ1/6227/2013 | மறு ஒ.அ.எண்.07/13—14, வரிசை எண்.6 | Dt:03.4.2014 | 1,477/- | Vol-I | 10 | 138 | WS |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | இ1/6684/2013 | மறு ஒ.அ.எண்.07/13–14, வரிசை எண்.2 | Dt:03.4.2014 | 1,477/- | Vol-I | 10 | 138 | WS |
| 4. | இ1/6685/2013 | மறு ஒ.அ.எண்.07/13–14, வரிசை எண்.3 | Dt:03.4.2014 | 1,479/- | Vol-I | 10 | 138 | WS |
| 5. | இ1/5113/2014 | ஒ.அ.எண்.02/14–15, வரிசை எண்.22 | Dt:02.1.2015 | 1,928/- | Vol-I | 16 | 202 | WS |
| | | | Re No.108079, Dt:11.09.2014 | 500/- | Vol-I | 45 | 449 | RF |
| | | | Re No.110926, Dt:14.11.2014 | 500/- | Vol-I | 48 | 485 | RF |
| 6. | இ1/5114/2014 | ஒ.அ.எண்.02/14–15, வரிசை எண்.23 | Dt:12.12.2014 | 1,928/- | Vol-I | 16 | 198 | WS |
| | | | Re No.108080, Dt:11.09.2014 | 500/- | Vol-I | 45 | 450 | RF |
| | | | Re No.110927, Dt:14.11.2014 | 500/- | Vol-I | 48 | 487 | RF |
| 7. | இ1/6559/2014 | ஒ.அ.எண்.03/14–15, வரிசை எண்.19 | Dt:06.02.2015 | 1,976/- | Vol-I | 17 | 208 | WS |
| | | | Re No.110928, Date:14.11.2014 | 500/- | Vol-I | 48 | 488 | RF |
| | | | Re No.113485, Date:05.01.2015 | 500/- | Vol-I | 49 | 496 | RF |
| 8. | இ1/6560/2014 | ஒ.அ.எண்.03/14–15, வரிசை எண்.20 | Dt:06.3.2015 | 1,966/- | Vol-I | 17 | 210 | WS |
| | | | Re No.110929, Dt:14.11.2014 | 500/- | Vol-I | 48 | 489 | RF |
| | | | Re No.113484, Dt:05.01.2015 | 500/- | Vol-I | 48 | 495 | RF |
| 9. | இ1/7824/2014 | ஒ.அ.எண்.04/14–15, வரிசை எண்.30 | Dt:23.4.2015 | 1,971/- | Vol-I | 19 | 226 | WS |
| | | | Re No.113997, Dt:12.01.2015 | 1,000/- | Vol-I | 51 | 513 | RF |
| 10. | இ1/7827/2014 | ஒ.அ.எண்.04/14–15, வரிசை எண்.33 | Dt:23.4.2015 | 1,960/- | Vol-I | 19 | 225 | WS |
| | | | Re No.113996, Dt:12.01.2015 | 1,000/- | Vol-I | 50 | 512 | RF |
| 11. | இ1/7828/2014 | ஒ.அ.எண்.04/14–15, வரிசை எண்.30 | Dt:23.4.2015 | 1,960/- | Vol-I | 19 | 227 | WS |
| | | | Re No.113998, Dt:12.01.2015 | 1,000/- | Vol-I | 51 | 514 | RF |
| 12. | இ1/1263/2015 | ஒ.அ.எண்.05/14–15, வரிசை எண்.40 | Dt:11.6.2015 | 1,969/- | Vol-I | 20 | 243 | WS |
| | | | Re No.119083, Dt:30.03.2015 | 1,000/- | Vol-I | 53 | 533 | RF |
| 13. | இ1/1264/2015 | ஒ.அ.எண்.05/14–15, வரிசை எண்.41 | Dt:11.6.2015 | 1,829/- | Vol-I | 20 | 244 | WS |
| | | | Re No.119084, Dt:30.03.2015 | 1,000/- | Vol-I | 53 | 534 | RF |
| 14. | இ1/1268/2015 | ஒ.அ.எண்.05/14–15, வரிசை எண்.45 | Dt:20.5.2015 | 1,993/- | Vol-I | 20 | 236 | WS |
| | | | Re No.119085, Dt:30.03.2015 | 1,000/- | Vol-I | 53 | 535 | RF |
| 15. | இ1/1269/2015 | ஒ.அ.எண்.05/14–15, வரிசை எண்.46 | Dt:20.5.2015 | 1,977/- | Vol-I | 19 | 235 | WS |
| | | | Re No.119086, Dt:30.03.2015 | 1,000/- | Vol-I | 53 | 536 | RF |
| 16. | இ1/3834/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.28 | Re No.106530, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 73 | 724 | RF |
| | | | Re No.109062, Dt:28.8.2015 | 500/- | Vol-I | 75 | 748 | RF |
| 17. | இ1/3838/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.32 | Dt:23.9.2015 | 1,859/- | Vol-I | 20 | 302 | WS |
| | | | Re No.106531, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 73 | 725 | RF |
| | | | Re No.109063, Dt:28.8.2015 | 500/- | Vol-I | 76 | 749 | RF |
| 18. | இ1/3839/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.33 | Dt:23.9.2015 | 1,973/- | Vol-I | 25 | 301 | WS |
| | | | Re No.106532, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 73 | 726 | RF |
| | | | Re No.109064, Dt:28.8.2015 | 500/- | Vol-I | 76 | 750 | RF |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19. | இ1/3840/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.34 | Re No.106533, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 73 | 727 | RF |
| | | | Ret No.109065, Date:28.8.2015 | 500/- | Vol-I | 76 | 751 | RF |
| 20. | இ1/3841/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.35 | Dt:22.9.2015 | 1,971/- | Vol-I | 25 | 299 | WS |
| | | | Re No. 106534, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 73 | 728 | RF |
| | | | Re No.109066, Dt:28.8.2015 | 500/- | Vol-I | 76 | 752 | RF |
| 21. | இ1/3848/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.42 | Dt:03.11.2015 | 1,989/- | Vol-I | 28 | 327 | WS |
| | | | Re No.106537, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 74 | 730 | RF |
| | | | Re No.109067, Dt:28.8.2015 | 500/- | Vol-I | 76 | 753 | RF |
| 22. | இ1/3849/2015 | ஒ.அ.எண்.02/15–16, வரிசை எண்.43 | Dt:03.11.2015 | 1,973/- | Vol-I | 27 | 326 | WS |
| | | | Re No.106538, Dt:16.7.2015 | 500/- | Vol-I | 74 | 731 | RF |
| | | | Re No.109068, Dt:28.8.2015 | 500/- | Vol-I | 76 | 754 | RF |
| மொத்தம் | | | | 53,167/- | – | – | – | – |

பட்டியலில் கண்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.53,167/–ஐ ஒப்பந்ததாரா் திருமதி. P.செல்வராணி என்பவருக்கு திரும்ப வழங்குவதற்கு தனி அலுவலா் மற்றும் ஆணையா் அவா்களின் அனுமதி கோரி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள தொகை ரூ.53,167/–ஐ ஒப்பந்ததாரா் திருமதி.P. செல்வராணி என்பவருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண்.இ1/5086/2019(ஸ்ரீ)**

**தீா்மானம் எண்.678 (பொருள்–13) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 14**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வாா்டு எண்–6, திருவளா்ச்சோலையில் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீா் தொட்டி, கட்டும் பணியினை உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2015–16–ன் கீழ் மதிப்பீடு ரூ.60.00 இலட்சத்திற்கு தயாா் செய்யப்பட்டு நகராட்சி நிா்வாக இயக்குனா் சென்னை அவா்களால் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியில் ரூ.50.00 இலட்சமும் பொது நிதியில் ரூ.10.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்து 22.7.2015 அன்று நிா்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 26.7.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.அஷ்ரப் அலி என்ற ஒப்பந்ததாரருக்கு 4.8.2016 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணியினை துவக்கம் செய்யும் நிலையில் குடிநீா் தொட்டி கட்ட திட்டமிட்டியிருந்த இடத்தில் திருமதி.சாவித்ரி என்பவா் ஆக்கிரமித்து குடியிருப்பு கட்டியிருந்தது கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்பு கட்டிடம் அகற்றப்பட்டு குடிநீா் தொட்டி கட்டும் பணி துவக்கப்பட்டது. அஸ்திவாரப் பணி நடைபெறும் தருவாயில், இவ்விடத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்த திருமதி.சாவித்ரி என்பவா் சென்னை உயா்நீதி மன்றம் மதுரை கிளையில்WP NO: 19392/2016 நாள்: 23.9.2016 அன்று பணியினை நிறுத்தக்கோரி வழக்கு தொடா்ந்து மாநகராட்சியில் குடிநீா் தொட்டி கட்டுவதற்கு தடை கோரி நிரந்தர உறுத்து கட்டளை 6.10.2019 அன்று நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் ஒப்பந்ததாரருக்கு குடிநீா் தொட்டி கட்டும் பணியில் அஸ்திவார பணி, மின் மோட்டாா் அமைக்கும் பணி, உந்து குழாய் மற்றும் பகிா்மான குழாய் அமைக்கும் பணிகள் முடித்தமைக்காக ரூ.31.20 இலட்சம் ஒப்பந்தாரருக்கு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கு கடந்த 3 வருடமாக நடைபெற்று 20.8.2019 அன்று மதுரை நீதிமன்றம் பரிசீலித்து தீர்ப்புரை வழங்கப்பட்டது.

இத்தீர்ப்புரையில் மாநகராட்சிக்கு சாதகமாக, பணியினை தொடர்ந்து செய்திட அனுமதியளிக்கப்பட்டதால் பணியினை துவக்க ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தபோது, ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளி கோரி 3 வருடம் முடிவுறும் நிலையில் கட்டுமான பொருட்கள், வேலையாட்கள் விலையேற்றத்தினால் பணியினை தொடர்ந்து அதே விலைவிகிதத்தில் செய்ய இயலாது என 19.03.2018 அன்று கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். மேலும் 2015–16 விலை விகிதத்தினைவிட தற்போது 2019–20க்கான பொதுப்பணித்துறை விலை விகிதம் கூடுதலாக உள்ளதால் இப்பணிக்கு புதிய விலை விகிதத்தில் மீதமுள்ள பணிகளை செய்ய ரூ.41.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு :**

1. குடிநீர் தொட்டி கட்டுவதற்கு 2015–16 வருடத்தில் ரூ.60.00 இலட்சத்திற்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யலாம்.
2. மேற்கொள்ளப்பட்ட பகுதி பணிக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.31.20 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கலாம்.
3. மீதமுள்ள பணிகளுக்கான திருத்திய மதிப்பீடு ரூ.41.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் எழுதி ஒப்புதலுக்கு அனுப்பலாம்.
4. குடிநீர் தொட்டி கட்ட மொத்த செலவின தொகை ரூ.72.20 இலட்சத்தில் உள்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் திட்டத்தில் ரூ.50.00 இலட்சம் மானிய தொகை போக மீதமுள்ள ரூ.22.20 இலட்சத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கி பணியினை முடிக்க ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்.இ7/4227/2016(மை)**

**தீர்மானம் எண்.679 (பொருள்–14) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்.15**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், தாராநல்லூர் கிராமம், வார்டு ஜி, நகரளவு எண் 47 மற்றும் சிலவற்றின் விஸ்தீரணம் 1150 ச.மீ. நிலத்தினை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அரசாணை வரப்பெற்றுள்ளதாகவும், அது தொடர்பாக மன்றத் தீர்மானம் நிறைவேற்றி, அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு திருச்சிராப்பள்ளி வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் அவர்களின் ந.க.எண் ஆ1/4002/19, நாள் 14.10.2019ம் தேதிய கடிதத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இடம் பார்வையிடப்பட்டது. மேற்கண்ட இடம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், தேர்தல் வார்டு 15, வார்டு ழு, நகரளவு எண் 47, 48, 49, 56 மற்றும் 78க்கு கட்டுப்பட்ட 1150 ச.மீ. நிலம், **தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, உத்தேச இடத்தில், தற்போது மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, அரசாணை வரப்பெற்றுள்ள மேற்படி நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய தனி அலுவலர் மன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி உத்தேச இடங்களில், தற்போது மாநகராட்சி திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், அரசாணை வரப்பெற்றுள்ள மேற்படி நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/10977/19/மையம்)**

**தீர்மானம் எண்.680 (பொருள்–15) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 16**

இம்மாநகராட்சியில் நான்கு கோட்டப் பகுதிகளுக்கும் உட்பட்ட 65 வார்டுகளில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் நகரில் அவ்வப்போது நடைபெறும் அரசு தொடர்பான விழாக்களுக்கும் மற்றும் நகரில் உள்ள கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது இதன் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதாகவும், மேலும் நான்கு கோட்டங்களுக்கும் மொத்தம் 80,000 கிலோ நீர்த்த சுண்ணாம்பு வாங்கி வழங்குமாறு சம்மந்தப்பட்ட கோட்ட சுகாதார ஆய்வாளர்களால் தேவைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ எண் | தேவைப்படும் பொருள் | எண்ணிக்கை (கிலோ) |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு | 80,000 கிலோ கிராம் |

பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ள நீர்த்த சுண்ணாம்பு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. மேற்கண்ட அட்டவணைப்படி நீர்த்த சுண்ணாம்பு வாங்குவது தொடர்பாக இது தொடர்பான நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதன் படி, ஒப்புநோக்கு செய்ததின் அடிப்படையில் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,000/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தினை 2019–2020ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தலைப்பு எண் 2100 சுகாதாரம் மற்றும் துப்புரவு செலவீனங்கள் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ30.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண் எச்4/10271/2019(மையம்)**

**தீர்மானம் எண்.681 (பொருள்–16) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீஅரங்கநாத சுவாமி திருக்கோவிலில் வைகுண்ட ஏகாதசி திருவிழா வரும் 26.12.2019 முதல் 16.01.2020 முடிய நடைபெற உள்ளது. மேற்கண்ட விழாவிற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அதிக அளவில் வருகை புரிய உள்ளார்கள்.

மேற்கண்ட விழாவிற்கு ஒவ்வொரு ஆண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ள துப்புரவு தளவாட சாமான்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாண்டு துப்புரவு பணிக்கான தளவாட சாமான்கள் வாங்க சம்மந்தப்பட்ட சுகாதார ஆய்வர் மற்றும் சுகாதார அலுவலரால் கீழ்கண்டவாறு தேவைப்பட்டியல் சமர்ப்பிக்கட்டுள்ளது.

| வ எண் | தளவாட சாமான்கள் | தேவை யான எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மூங்கில் கூடை | 300 |
| 2. | மூங்கில் மிளார் | 120 |
| 3. | மூங்கில் கைபிரஸ் | 200 |
| 4, | விளக்குமாறு | 300 |
| 5 | மண் வெட்டி | 100 |
| 6. | அகப்பை | 100 |
| 7. | கை ஒடு | 200 |
| 8. | அரிவாள் | 30 |
| 9. | கடப்பாறை | 15 |
| 10. | இரண்டு பல் பிக்காஸ் | 50 |
| 11. | நான்கு பல் பிக்காஸ் | 50 |

| | | |
|---|---|---|
| 12 | அலுமினிய கூடை | 200 |
| 13 | 1 பல் முள் கொக்கி | 75 |
| 14 | 5 பல் முள் கொக்கி | 75 |

மேற்கண்ட தளவாட சாமான்களை விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள இது தொடர்பான நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளதில் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,93,000 /–ஆக கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.3,93,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தினை 2019–2020ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் திருவிழாவிற்கான தலைப்பின் கீழ் ரூ.30.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.11401/2019/எச்4(மையம்)**

**தீர்மானம் எண்.682 (பொருள்–17) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட நிதியுதவியின் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 10.10.19 அன்று கோரியதில், (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 260/2019-20) வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **திடக்கழிவு மேலாண்மை (SBM 2018-19)** | | | |
| 1 | வார்டு எண் 9 அய்யாளம்மன் படித்துறை நுண் உரக்கிடங்கு அருகில் Resource Recovery Centre கட்டும் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.**22.00** லட்சம் E3/9533/19(M) | ஆர்.தங்கமுத்து, திருச்சி<br>எஸ்.கோவிந்தராஜ், திருச்சி | 0.04% குறைவு<br>0.48% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.தங்கமுத்து, திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண் 27 மணல்வாரித் துறை நுண்உரக்கிடங்கு அருகில் Resource Recovery Centre கட்டும் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.**20.60** லட்சம் E3/10973/19(M) | R.வெள்ளைச்சாமி, திருச்சி<br>K.கார்த்தி, திருச்சி | 0.18% குறைவு<br>1.43% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.R.வெள்ளைச் சாமி, திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.18 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்36 கொட்டப் பட்டு ஜே.ஜே.நகர் நுண் உரக்கிடங்கில் Resource Recovery Centre கட்டும் பணி<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.19.20 லட்சம்<br>E3/10974/19(M) | சி.பட்டாபிராமன், திருச்சி<br><br>பி.ஞானசேகர், திருச்சி | 0.01% குறைவு<br><br>1.03% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.சி.பட்டாபிராமன், திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் 5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[ இ3/9546/2019]**

**தீர்மானம் எண்.683 (பொருள்–18) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – சு. சிவசுப்ரமணியன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**